**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO-243/2019**

**Dated :16.02.2026**

**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (Defacto Complainant)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெள்ளிராஜா | வயது | : | 42 |
| தந்தை பெயர் | : | கோபால் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | தோப்புக்கொல்லை | தொழில் | : | கூலிவேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்து போன கோபால் என்பவர் என் தந்தை ஆவார். கடந்த 2018 ஆம் ஆண்டு, தேதி, மாதம் ஞாபகம் இல்லை, எனது தந்தை ஆயுத பூஜைக்கு பொருட்கள் வாங்குவதற்காக கந்தர்வக்கோட்டைக்கு வந்தார். நான் கல்லுக்காரன்பட்டியில் மரம்வெட்டிக்கொண்டிருந்த போது, கோவிந்தராஜ் என்பவர் எனக்கு போன் செய்து, எனது தந்தை கந்தர்வக்கோட்டையில் விபத்தில் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார், நான் உடனே கந்தர்வக்கோட்டை வந்தேன், அதற்குள் எனது தந்தையை புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டதால், நான் அங்கு சென்று இறந்து போன எனது தந்தையை பார்த்தேன், மறுநாள் காலையில், இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இந்த புகார் மனு நான் கொடுத்தது

தான். **(மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் மருத்துவமனை வந்து, இறந்து போன எனது தந்தையின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள், நானும் உடன் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) புகார் மனுவில், என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கையொப்பம் செய்த தாளில் எழுதியிருந்ததா என்றால் இல்லை, வெள்ளைப்பேப்பரில் தான் கையொப்பம் செய்தேன். எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.02.16 15:49:59 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**